2001 செப்டம்பர் 10] [திரு. ப. தனபால்]

"2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. ப. தனபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

4. அறிவிப்புகள்

(அ) புத்தறிவுப் பயிற்சிக் கருத்தரங்கு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. புத்தறிவுப் பயிற்சிக் கருத்தரங்கு புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் பயன்பெறும் வகையில் இன்று மாலை 4-30 மணியளவில் தலைமைச் செயலகம், நாமக்கல் கவிஞர் மாளிகையில் 10-வது தளத்தில் உள்ள மாநாட்டுக் கூட்ட மண்டபத்தில் நடைபெற உள்ளதால், உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொண்டு கருத்தரங்கை சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(ஆ) மாண்புமிகு முதலமைச்சர் உறுப்பினர்களுக்கு அளிக்கும் விருந்து தள்ளிவைப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, 13 ஆம் தேதி மாலையில் நடைபெறுவதாக இருந்த முதலமைச்சர் அவர்கள் சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கு விருந்து அளிக்கிற நிகழ்ச்சி, பேரவை உறுப்பினர்கள் பலருடைய வேண்டுகோளுக்கிணங்க தள்ளிவைக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.